LIBRARY
10 OCT 1968
STATE LEGISLATURE, M

தமிழக சட்டப் பேரவை

வியாழக்கிழமை, 1968 பிப்ரவரி 29

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப்பேரவை மண்டபத்தில் காலை 9 00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர், **திரு. சி. பா. ஆதித்தனார்**, அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. நீத்தார் நினைவுக் குறிப்பு.

திரு. எஸ். பொன்னுசாமி நாடார், முன்னாள் உறுப்பினர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1962-லிருந்து 1967-ம் ஆண்டுவரை தூத்துக்குடித் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட தமிழ்நாடு சட்டப் பேரவையின் முன்னாள் உறுப்பினர் திரு. எஸ். பொன்னுசாமி நாடார் அவர்கள் 1968-ம் வருடம் பிப்ரவரி மாதம் 17-ம் தேதியன்று மறைந்து விட்டதைக் குறித்து, இந்தப் பேரவையின் இரங்கலையும், ஆழ்ந்த வருத்தத்தையும், அவரை இழந்த குடும்பத்தினருக்கு நான் தெரிவிக்கிறேன்.

அன்னாருக்கு மரியாதை அளிக்கும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லோரும் எழுந்து ஒரு நிமிடம் மவுனமாக நிற்கும்படி வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

(உறுப்பினர்கள் எல்லோரும் எழுந்து ஒரு நிமிடம் மவுனமாக நின்றார்கள்.)

2. வினாக்கள்-விடைகள்.

வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகள்

* 100 வினா.—**திரு. ஜெ. பெள்ளி கௌடர் :** மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டத்தில், பெண்களுக்கென ஆசிரியை பயிற்சிப் பள்ளி ஒன்றை ஏற்படுத்தும் செயற்குறிப்பு ஏதேனும் பரிசீலனையிலுள்ளதா?

(இ) ஆம் என்றால், அடுத்த எவ்வாண்டிலிருந்து அமல்படுத்தப் படும் ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) இல்லை.

(இ) இந்தக் கேள்விக்கு இடமில்லை.

திரு. கே. விநாயகம் : ஸார், நீலகிரிப் பிரதேசம் ஒரு மலைப் பிரதேசமாக இருப்பதினால், அங்கு பயிற்சி பெறவேண்டுமென்று நினைக்கிற ஆசிரிய மாணவர்கள் வெகுதூரம் கோயம்புத்தூர் அல்லது வேறு ஊருக்குப் போகவேண்டிய நிலைமை இருக்கிறது. அதுவும் பெண்களாக இருப்பவர்களுக்கு வசதியாக இருக்கும்பொருட்டு, இதில் கொஞ்சம் நஷ்டம் ஏற்பட்டாலும் அரசாங்கம் அவர்களுக்காக அங்கு ஒரு டிரைனிங் ஸ்கூல் வைப்பதற்குத் தயவுசெய்து இந்த ஆண்டிலாவது முயற்சி செய்து, வருகிற பட்ஜெட் ஆண்டில் அதைச் சேர்த்துக்கொள்ள ஏதாவது ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, ஏற்கனவே இரண்டு ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகள் அங்கே இருக்கின்றன. ஒன்று பெதால் பேஸிக் டிரைனிங் ஸ்கூல், ஊட்டி. அங்கு 40 ஆசிரியைகள் ஆண்டுதோறும் பயிற்சி பெறக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. அரசாங்க ஆதாரப் பயிற்சிப் பள்ளி ஒன்றும் கூனூரில் இருக்கிறது. இரு

பள்ளிகளிலும் இருந்து பயிற்சிபெற்று வருகிற ஆசிரியர்கள் போதுமான அளவுக்கு இருக்கிற காரணத்தினால் மேலும் தேவையில்லை என்று அரசாங்கம் கருதுகிறது.

திரு. கே. போஜன் : இப்பொழுது நம்முடைய அமைச்சர் அவர்கள் விடையில் நீலகிரியில் ஆசிரியை பயிற்சிப் பள்ளி அமைக்க உத்தேசம் இல்லை என்று கூறினார்கள். நீலகிரியில் இப்பொழுது ஆரம்பப் பள்ளி, உயர் ஆரம்பப் பள்ளி ஆகியவற்றில் பெரும்பாலும் சிறுமியர்கள்தான் அதிகமாக இருக்கிறார்கள். 50 சதவீதத்திற்குமேல் சிறுமியர்கள் இருக்கிறார்கள். பள்ளிகளுக்குப் பெண் ஆசிரியர்கள் நீலகிரியில் கிடைப்பதில்லை. கூனூரில் இருக்கும் பயிற்சிப் பள்ளியில் ஆண்டுதோறும் 150 மாணவர்களுக்குப் பயிற்சி பெறுவதற்கு இடம் இருக்கிறது. அந்த எண்ணிக்கையைக் குறைத்து, ஒரு பகுதியை, அதாவது 70, 80 இடங்களைப் பெண்களுக்கு என்று ஒதுக்கி, ஒரு ஆசிரியை பயிற்சிப் பள்ளி ஏற்படுத்துவதற்கு முன்வந்தால், மேற்கொண்டு நீலகிரி மாவட்டத்தில் அதிகமான பெண்கள் ஆசிரியர் பயிற்சிபெற்று அங்குள்ள பாடசாலைகளுக்கு அதிகமான பெண் ஆசிரியர்கள் வருவதற்குச் சௌகரியமாக இருக்கும். எனவே, அதற்கான முயற்சியை எடுக்கும் உத்தேசம் அரசுக்கு உண்டா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அவைத் தலைவர் அவர்களே, நீலகிரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில் கணக்கிட்டுப் பார்த்தோமானால், சாதாரணமாக ஓய்வு பெறுகிற ஆசிரியர்கள், அல்லது எதிர்பாராத வகையில் இறந்துபடுகிற ஆசிரியர்கள் ஆகியோர்களுடைய இடங்களை நிரப்புகின்ற தன்மையின் அடிப்படையில் ஆண்டுதோறும் 100 ஆசிரியர்கள் தேவைப்படுகிறார்கள். அந்த மாவட்டத்தில் என்ற நிலைமை இருக்கிறது. அதை அடிப்படையாகக்கொண்டு பெதால் பேஸிக் டிரெயினிங் ஸ்கூல், ஊட்டியில் 40 ஆசிரியர்கள் பயிற்சி பெறுகிறார்கள். மாண்புமிகு உறுப்பினர்கள் அவர்கள் கூறுவதுபோன்று ஆசிரியர்களின் எண்ணிக்கை போதுமான அளவுக்கு இல்லை என்ற நிலைமை இருக்குமானால், அங்கே வேண்டுமானால் இடத்தைக் கூட்டிக் கொடுப்பதற்கு வாய்ப்பு இருக்குமா என்பதைப் பற்றி அரசு ஆலோசிக்கலாம்.

திரு. ஜி. ஆர். எட்மண்ட் பெர்னாண்டோ : தலைவர் அவர்களே, இந்தப் பயிற்சிப் பள்ளிகள் தொழில் சம்பந்தமான பயிற்சிப் பள்ளிகளாக இருக்கிற காரணத்தினால், தனியார்கள் நடத்தும் இப்பேர்ப்பட்ட பயிற்சிப் பள்ளிகளை அரசாங்கமே ஏற்று நடத்தும் உத்தேசம் இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அப்படிப்பட்ட உத்தேசம் இல்லை.

திரு. கரு. சீமைச்சாமி : பொதுவாக ஆசிரியர் பயிற்சி பெற்றவர்கள் நிறைய பேர்கள் வேலை இல்லாமல் இருக்கிறார்கள். எந்த முறையில் ஆசிரியர்கள் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள் ? ஆண்டுதோறும் எத்தனை ஆசிரியர்கள் ஓய்வு பெறுகிறார்கள் என்று கணக்குப் பார்த்து, எத்தனை ஆசிரியர்கள் தேவை என்று தேர்ந்தெடுக்கப்படுகிறார்களா அல்லது ஒரு ஆசிரியர் பயிற்சிப் பள்ளிக்கு 100, 150 என்ற எண்ணிக்கை அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்படுகிறார்களா ? ஆசிரியர்கள் இத்தனை பேர்கள் தேவை என்ற அடிப்படையில் இனிமேலாவது ஆசிரியர்களைத் தேர்ந்தெடுப்பதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, பொதுவாக நாட்டினுடைய தேவையைக் கருதித்தான் எவ்வளவு பேர்கள் வேண்டும் என்ற நிலைமையில் ஆங்காங்கு ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகள் வைக்கப்பட்டன. இப்பொழுது இன்னும் வளர்ந்து வரவேண்டிய நிலைமை இருக்கிற காரணத்தினால், மேலும் துவக்கப் பள்ளிகள் ஆங்காங்கு ஆரம்பிக்கப்படுகிற நிலைமை இருக்கிற காரணத்தினால், இப்பொழுது இருக்கிற அளவு போதுமானதாக இருக்கிறது என்று கருதப்படுகிறது. இப்பொழுதே ஆசிரியர்கள் சில பேர்களுக்கு வேலை வாய்ப்புக் கிடைக்காத சூழ்நிலை இருக்கிறது. அதே நிலையில் 100-க்கு 100 ஆறு வயதிலிருந்து 11 வயதுக்

1968 பிப்ரவரி 29]

குட்பட்டவர்களைக் கட்டாயம் பள்ளிகளில் சேர்க்கவேண்டும் என்ற முயற்சியில் 93 சதவீதம்தான் சேர்க்க முடிந்தது. இன்னும் 6, 7 சதவீதம் சேர்க்க வேண்டிய நிலைமையும் இருக்கிறது. ஆண்டு ஒன்றுக்கு 7,200 ஆசிரியர் களுக்கு வாய்ப்பு ஏற்படும் என்ற திட்டம் இருக்கிறது. இப்பொழுது இருக் கிற அளவுக்கு மேலும் எண்ணிக்கையைக் கூட்டாமல், மேலும் பயிற்சிப் பள்ளிகள் ஆரம்பிக்காமல், இருப்பதை வைத்துக்கொண்டே சமாளிக்க லாம் என்ற எண்ணம்தான் இப்பொழுது இருந்து வருகிறது.

திருமதி வி. ப. பழனியம்மாள் : தலைவர் அவர்களே, நீலகிரி மாவட்டத் தில் ஆசிரியர் பயிற்சிக்காக விண்ணப்பித்த மாணவிகள் எத்தனை பேர் கள், அவர்களில் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் எத்தனை பேர்கள் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, தனிக்கேள்வி போடவேண்டும்.

திரு. மா. பா. சாரதி : தலைவர் அவர்களே, நீலகிரி மாவட்டத்தைத் தவிர்த்து, மற்ற மாவட்டங்களில் பெண்களுக்கான பயிற்சிப் பள்ளிகள் இந்த ஆண்டில் ஆரம்பிக்க உத்தேசம் உண்டா ? அப்படியிருந்தால், எந்தெந்த மாவட்டத்தில் என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அவைத் தலைவர் அவர் களே, அப்படிப்பட்ட உத்தேசம் இல்லை, தேவையில்லை என்று கருது கிறேன்.

திரு. இல. பலராமன் : ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகள் பேஸிக், நான்- பேஸிக் என்ற அடிப்படையில் இருப்பதை மாற்றி அமைக்க ஏதாகிலும் அரசுக்கு உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : பேஸிக் என்று இருப்பதை மெள்ள மெள்ள நான்-பேஸிக்காக மாற்றவேண்டும் என்ற கொள்கை தான் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. ஆனால், ஆதாரப் பயிற்சிப் பள்ளி யின் அடிப்படை நோக்கம் என்னவோ, அந்த நோக்கத்தை இப்பொழு திருக்கும் பயிற்சிப் பள்ளிகளில் இணைத்துக்கொண்டு, ஆதாரப் பயிற்சிப் பள்ளி என்று தனியாக இல்லாமல், இப்பொழுது இருக்கிற பயிற்சிப் பள்ளி களிலேயே பேஸிக்கில் இருக்கிற தேவையானவற்றை ஏற்று நடத்திக் கொள்ளலாம் என்ற அடிப்படையில்தான் கொள்கை இருக்கிறது. கோதாரி கமிஷனும் அப்படிப்பட்ட சிபாரிசு செய்திருக்கிறது. அந்த அடிப் படையில் இனி இவை மாற்றப்படும்.

திரு. சி. நஞ்சன் : நீலகிரி மாவட்டத்தில் கூடலூர்ப் பகுதியிலே தோட்ட நிர்வாகஸ்தர்கள் நடத்தக்கூடிய பாடசாலைகளில் ஒவ்வொரு பாடசாலை யிலும் மாணவர்களின் எண்ணிக்கை அதிகமாக இருந்தும், அங்கே மாண வர்களுக்குத் தகுந்த ஆசிரியர்களை நியமிக்காமல் 100 மாணவர்களுக்கு ஒன்றிரண்டு ஆசிரியர்களைத்தான் நியமித்திருக்கிறார்கள். இதுபோல இருக்கக்கூடிய குறைகளை அரசாங்கம் ஆராய்ந்து அங்கெல்லாம் தகுதியான அளவுக்கு ஆசிரியர்களை நியமிக்க அரசாங்கத்திற்கு ஏதாவது உத்தேசம் உண்டா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அவைத் தலைவர் அவர் களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதைப்பற்றி விவரங்களை எழுதித் தருவார்களேயானால், அதைப்பற்றி ஆராய்ந்து தக்க பரிகாரம் தேடலாம்.

திரு. கே. விநயகம் : சார், ஆசிரியர் பயிற்சியில் இரண்டுவிதம் இருக்கிறது, ஒன்று ஹையர் கிரேட் ட்ரைனிங், இன்னொன்று செகண்டரி கிரேட். இவை பி. டி. தவிர. ஹையர் கிரேட் ட்ரைனிங்கில் கல்வித்தரம் குறைவாக இருப்பதால், அது அவ்வளவு சிறந்தது அல்ல என்று கருதப் படுகிறது. ஆதலால், செகண்டரி கிரேடையே வைத்துக்கொள்ள வேண்டும் என்கிற கருத்து இருக்கிறது. ஆகவே, வருகிற ஆண்டிலாவது, ஹையர்

கிரேடைக் கட்டுப்படுத்தும் உத்தேசம் சர்க்காருக்கு உண்டா அல்லது அதைத் தொடர்ந்து வைக்கவேண்டும் என்கிற யோசனை இருக்கிறதா? சர்க்காரின் கொள்கை என்ன?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அவைத் தலைவர் அவர்களே, ஹையர் கிரேடை செகண்டரி கிரேடாக மாற்றியமைக்க வேண்டும் என்பதுதான் கொள்கை. அந்த வகையில் மாற்றிக்கொண்டும் வருகிறோம். எப்படியும் எதிர்காலத்தில் ஹையர் கிரேடே அல்லாத வகையில், அந்த அடிப்படையில்தான் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

* 101 வினா—**திரு. சு. துரைசாமி :** மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்பூரில் ஆசிரியர் பயிற்சிப் பள்ளி ஒன்று நிறுவும் உத்தேசம் ஏதேனும் பரிசீலனையிலுள்ளதா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இல்லை.

திரு. சு. துரைசாமி : திருப்பூர் முதலிய பெரிய நகரங்களிலிருந்து மாணவர்கள் வெளியே சென்று படிக்க வேண்டிய நிலை இருக்கிறது. அவர்களுக்கு வசதி செய்துகொடுக்க, இனிமேலாவது அந்த நகரத்திலே ஓர் ஆசிரியர்கள் பயிற்சிப் பள்ளியைத் தொடங்க அரசு முயற்சிக்குமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அவைத் தலைவர் அவர்களே, மாநில முழுதும் 115 ஆதாரப் பள்ளிகளும், நான்-பேஸிக் பயிற்சிப் பள்ளிகள் 20-ம் இருக்கின்றன. அவற்றில் கோவை மாவட்டத்திலே 13 பள்ளிகள் இருக்கின்றன. அந்த நிலையில் மேலும் பயிற்சிப் பள்ளி தேவையில்லை என்று அரசாங்கம் கருதுகிறது.

திரு. கே. எம். ராமசாமி கவுண்டர் : கோவை மாவட்டத்திலே கோபியிலிருந்து 25 மைல் சுற்றளவில் எவ்விதப் பயிற்சிப் பள்ளியும் கிடையாது. அந்த நகரத்திலும் வட்டத்திலும் 7, 8 ஆண்கள் பள்ளிகளும், இரண்டு பெண்கள் பள்ளிகளும் இருக்கின்ற காரணத்தால், கோபியில் ஆண்களுக்கோ அல்லது பெண்களுக்கோ ஒரு பயிற்சிப் பள்ளியை ஏற்படுத்த அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அவைத் தலைவர் அவர்களே, நான் முதலிலே குறிப்பிட்ட மாதிரி, இப்பொழுது அமைந்திருக்கும் பயிற்சிப் பள்ளிகளே போதுமானவையாக இருக்கின்றன. பயிற்சி பெறும் ஆசிரியர்கள் அத்தனை பேருக்கும் வேலை அமைத்துக் கொடுக்க முடியாத நிலைமைகளும் இருக்கின்றன. மேலும் அந்தந்த வட்டாரத்து மாணவர்கள் படிக்க வாய்ப்பாகப் பள்ளிகள் அமைந்திருக்கவேண்டும். ஆனால், பயிற்சிப் பள்ளிகள் அங்கேயே இருக்கவேண்டும் என்பதில்லை. எங்கேயிருந்தாலும், எந்த இடத்தில் இருப்பவர்களும் வேறு வேறு இடங்களுக்குப் போய் வேலை செய்யும் நிலைமைகளும் இருக்கின்றன. ஆகவே, ஆசிரியர்களும் போதுமானவர்களாக இருக்கிறார்கள். சொல்லப்போனால், அதிகமாகக்கூட இருக்கிறார்கள். அவர்களை எப்படி ஈர்ப்பது என்பதில்தான் கவனம் செலுத்தவேண்டியிருக்கிறது. மேற்கொண்டு பயிற்சிப் பள்ளிகள் துவங்குவதாக இல்லை.

திரு. வ. க. இராமராசன் : பவானி சாகரில், ஏராளமாக காலியான கட்டடங்கள் இருக்கின்றன. அங்கே ஒரு ஆசிரியர்கள் பயிற்சிப் பள்ளியைத் துவக்க அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா?

மாண் மிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: அப்படிக் காலிக் கட்டடங்கள் இருக்குமேயானால், அவற்றை வேறு வகைகளில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். அதை ஆராய்ந்து செய்யலாம். ஆனால் அங்கே பயிற்சிப் பள்ளி வைப்பதற்கில்லை.

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, sometime back there was a proposal to introduce the subject of 'Teaching' as an optional subject in the high school curriculam, so that boys might take up